(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(1).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 ஆகஸ்ட் 19 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 செப்டம்பர் 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அப்போதைய நீதி அமைச்சர் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்றை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் நடத்தியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சமூக ஊடகங்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

26/2022

கௌரவ புத்திக பத்திரண,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கெரம் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை;

(ii) மேற்படி பணத்தொகையில் அரச பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையில் பாடசாலையை விட்டு விலகிய சிறுவர்களின் கெரம் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கெரம் விளையாட்டில் சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பாடசாலை விளையாட்டு வீரர்களை நெறிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தேசிய கெரம் சங்கத்தினதும் அதனுடன் இணைந்துள்ள ஏனைய சங்கங்களினதும் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் தொடர்புபடுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதில் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

294/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி குட் ஷெட் பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அப்பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) குட் ஷெட் பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு ஒருங்கமைவாக கண்டி புகையிரத நிலையமும் நவீனமயப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி தீயணைப்புப் படை தலைமையகத்திற்கு அருகாமையில் சுரங்கப் பாதையொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அச்சுரங்கப் பாதையை அமைப்பதற்குரியதாக சுற்றாடல் அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அது தொடர்பாக கிரய-நலன் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

340/2022

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள, அரசாங்கம் அல்லது இதர நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி இல்லங்களில் பராமரிக்கப்படுகின்ற பெண் மற்றும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பிள்ளைகளுக்குத் தேவையான கல்வியை வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த பிள்ளைகள் சமூகமயமானதைத் தொடர்ந்து அவர்களை தொழில்களுக்கு ஆற்றுப்படுத்தும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறான வேலைத்திட்டமொன்று எப்போது தயாரிக்கப்படும் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

672/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையில் சேவையாற்றும் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த தீர்மானிப்பதற்கு ஏதுவான காரணிகள் யாவையென்பதையும்;

(ii) ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்த்தப்படுவதன் காரணமாக 55 வயது பூர்த்தியடையும்போது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்து இழக்கப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

965/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் (சணச) எண்ணிக்கை யாது;

(ii) அந்த மாவட்டத்தின் குருமன்வெளி மற்றும் எருவில் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்கள் முறையாக இயங்கிவருவதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்த மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்களை முறையாக இயங்கச் செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி சங்கங்களுக்கென நிரந்தரக் கட்டடங்களை அமைத்தல் தொடர்பான திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1104/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு விவசாய தரவுக்களஞ்சியம் ஒன்றினை நிறுவுவது மிகவும் முக்கியமானது என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கமத்தொழில் அமைச்சினால் விவசாய தரவுக்களஞ்சியத்தினை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதற்கென இது வரையில் செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) விவசாய தரவுக்களஞ்சியத்தை நிறுவுகையில் யாதேனும் மோசடி இடம்பெற்றிருப்பின், அது தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1512/2022

கௌரவ ஜகத் சுமித்ராரச்சி,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நாளாந்த எரிபொருள் தேவை ஒவ்வொரு வகை எரிபொருளுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்படும் பணத்தொகை ஐ. அ. டொலர்களில் எவ்வளவு என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டில் இலங்கைக்கு தருவிக்கப்பட்ட எரிபொருளின் அளவானது ஒவ்வொரு வகை எரிபொருளுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வகை எரிபொருளுக்கமைய ஐ. அ. டொலர்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022 ஆம் ஆண்டு சனவரி முதல் மார்ச்சு வரையில் மாதாந்தம் இலங்கைக்கு தருவிக்கப்பட்ட எரிபொருளின் அளவானது ஒவ்வொரு வகை எரிபொருளுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வகை எரிபொருளுக்கமைய ஐ. அ. டொலர்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இதுவரை இலங்கைக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை (கடன்/கைப் பணம்), மேற்படி எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகளுக்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1524/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா போஸ்பேட் நிறுவனத்தில் பாதுகாப்புப் பிரிவொன்று இயங்குகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பாதுகாப்புப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்புப் பிரிவை, வரையறுக்கப்பட்ட போஸ்பேட் நிறுவனத்திலிருந்து அகற்றி தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக பணிப்பாளர் சபை தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி பாதுகாப்புப் பிரிவை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்குகையில் பின்பற்றப்படும் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1670/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகளுக்கு பிரசவ விடுமுறை வழங்காதிருப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தீர்மானம் காரணமாக அவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2022 செப்டம்பர் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1893/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செஸ் வரி என்ற பெயரில் வரியொன்று இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வரியை விதித்ததன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வரி அறவிடப்படுகின்ற துறைகள் யாவை என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அறவிடப்பட்டுள்ள செஸ் வரித் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) இன்றளவில் அவ்வரியை விதித்ததன் நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா என்பதையும்;

(vi) இன்றேல், அது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1998/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் இலங்கையில் பதிவாகிய ஒவ்வொரு சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு காரணமாக ஏற்பட்ட விபத்தும் இடம்பெற்ற இடம், தொடர்புடைய பொலிஸ் அதிகாரப் பிரிவு, நிருவாக மாவட்டம், மேற்படி விபத்து காரணமாக ஏற்பட்ட சேதம் மற்றும் நிதிசார் நட்டம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி விபத்துக்கள் காரணமாக ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள், காயங்கள் மற்றும் சொத்துக்களுக்கான சேதங்கள் தொடர்பில் நட்டஈடு செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விபத்துக்குமாக செலுத்த எதிர்பார்க்கும் நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2039/2022

கௌரவ லலித் எல்லாவல,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் திரு. ரோஹண விஜேவீர அவர்களை 1989.11.12 ஆம் திகதி அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் கைது செய்து அது தொடர்பாக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தியது என்பதையும்;

(ii) 1989.11.13 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் மரணம் இயற்கை மரணமா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஒரு படுகொலையா என்பதையும்;

(iii) படுகொலை எனின், அது தொடர்பில் இலங்கையின் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி மரணம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் அல்லது தலைவர் ஒருவர் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2040/2022

கௌரவ வேலு குமார்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், பஹத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குடும்பங்களில் குழாய் மூலமான குடிநீர் வசதிகளைக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2058/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஹொரணை, வகவத்த பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட டயர் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட காணிகளின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் வழங்கப்படும்போது அறவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அக்காணிகளுக்கான உரித்தினைக் கொண்டிருந்த தரப்பின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக குறிப்பிட்ட காணிகள் சாட்டப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2168/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் சிறுபோகத்தின்போது நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றுள் சேதனப் பசளை பயன்படுத்தப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) சேதனப் பசளையைப் பயன்படுத்தி நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவையென்பதையும்;

(iv) அநுராதபுரம் மாவட்டத்தில் சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்படும் நெற் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2516/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை பாடசாலை மாணவர்களின் போசாக்கின்மை விகிதமானது ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப தனித் தனியே யாதென்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களின் போசாக்கின்மையை இல்லாதொழிப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2531/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை மாவட்டத்திலுள்ள —

(i) வீடுகள் தேவைப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியின் கீழ் தனியார் காணிகளில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

(iii) மாதிரிக் கிராமங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் திருக்கோவில், நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்திற்கான மிகுதி நிதித் தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அத் திட்டம் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 செப்டம்பர் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2534/2022

கௌரவ மதுர விதானகே,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிரம வாசனா நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2550/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(i) அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கிராமங்களில் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) இதுவரையில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாத வீடமைப்புக் கிராமங்கள் காணப்படின், அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வீடமைப்புக் கிராமங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள மற்றும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2563/2022

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மத்திய அரசுக்குரிய ஆயுர்வேத மருத்துவமனைகளினதும் மாகாண சபைகளுக்குரிய ஆயுர்வேத மருத்துவமனைகளினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மத்திய அரசின் ஆயுர்வேத மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) ஆயுர்வேத மருத்துவமனைகளுக்கு மருத்துவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுதேச மூலிகைப் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பூங்காக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவை அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2575/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் பதிற் கடமையாற்றும் அதிபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) பதிற் கடமையாற்றும் அதிபர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்போது பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பதிற் கடமையாற்றும் அதிபர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இல்லையெனில், தேவையான நிதியை ஒதுக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2582/2022

கௌரவ லலித் வர்ண குமார,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள இணக்கச் சபைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி இணக்கச் சபைகளூடாக இதுவரையில் இணக்கஞ் செய்யப்பட்டுள்ள பிணக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) இணக்கச் சபை முறைமையானது அமைச்சினால் தற்போது மேற்பார்வை செய்யப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இணக்கச் சபை அலுவலர்களின் சேவையினைப் பாராட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இணக்கச் சபை செயற்பாட்டினை காலத்திற்கேற்ற வகையில் மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2586/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரத பயணிகளின் வசதியை விரிவுபடுத்தும் நோக்கில் புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்தும் கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு புகையிரத நிலையத்தினதும் பெயர், குறிப்பிட்ட புகையிரத நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர், குறிப்பிட்ட கருத்திட்டத்துக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை, குறிப்பிட்ட கருத்திட்டத்தின் பணிகளை ஆரம்பிக்க உத்தேசித்துள்ள காலகட்டம், இக்கருத்திட்டத்திற்கான திட்டவமைப்பின் பிரகாரம் உள்ளடங்கும் வேலைத்திட்டம் என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2601/2022

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கை பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடனின் அளவு ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கடனும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனம்/ நாடு தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கடனுக்காகவும் செலுத்தப்படுகின்ற தவணைப்பணம் மற்றும் வட்டி தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2613/2022

கௌரவ அனுப பஸ்குவல்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கையில் அரச வைத்தியசாலை களிலிருந்து நீர்வெறுப்பு நோய்க்கான (விசர் நாய் கடிக்கான) தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) நீர்வெறுப்பு நோய்க்கான தடுப்பூசிகள் இல்லாமை காரணமாக மேற்படி காலப்பகுதியில் நீர்வெறுப்பு நோய்க்கு ஆளாகியுள்ள நோயாளிகள் உயிரிழந்துள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நோயாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நீர்வெறுப்பு நோய்க்கான தடுப்பூசிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அதற்காக செலவிடப்பட்ட முழுத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2620/2022

கௌரவ டீ. வீரசிங்க,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப. சீனோர் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) இதனை ஆரம்பித்த அடிப்படை நோக்கம் தற்போது நிறைவேறியுள்ளதா என்பதையும்;

(iii) வ/ப. சீனோர் மன்றத்துக்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) படகுகள், வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி உபகரணங்கள் கடற்றொழிலாளர்களுக்கு சலுகை விலையில் அல்லது இலவசமாக வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) கடற்றொழிலாளர்களின் வருடாந்த வருமானத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2628/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மகப்பேற்று சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கமைய வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சிகிச்சை நிலையங்களின் பௌதீக மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 செப்டம்பர் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அதிவேக நெடுஞ்சாலைகள் கருத்திட்டங்களுக்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளை முகாமைத்துவம் செய்யும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) அக்காணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக கம்பெனியொன்றினை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கம்பெனி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இல்லையெனில், அக்கம்பெனி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட கம்பெனிக்கு யாரால் காணிகள் சாட்டப்படுகின்றன என்பதையும்;

(vi) அக்காணிகளைச் சாட்டுவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

27/2022

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கம், வெள்ளி மற்றும் இரும்பு சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்கின்ற கைத்தொழிலாளர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசங்கள் தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பிரதேசங்கள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கின்ற மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களில் பாரம்பரியமாக ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பிரச்சினைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின், அது எவ்வாறென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இடையீடு செய்யப்பட்டிருப்பின், அது எவ்வாறென்பதையும்;

(v) இவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்களின் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நாடுகள் யாவை என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் மேற்குறிப்பிட்ட பொருட்களின் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

295/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி கங்கையை அண்டியதாக கன்னோருவ, வராதென்ன பிரதேசத்தில் “ஹத்கிந்த” என்றபெயரில் சுமார் 59 ஹெக்டெயார் பரப்பளவுகொண்ட இயற்கையான ஒரு தீவுக்கூட்டம் காணப்படுகிறது என்பதையும்;

(ii) அந்தச் சூழல் தொகுதியின் தனிச்சிறப்பான உயிர் பல்வகைமை காரணமாக இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமாகவிருந்த அப்பிரதேசமானது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்திற்கமைய 2017.06.13 ஆம் திகதி “வராத்த ஹத்கிந்த சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம்” எனப் பெயரிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கு அனுமதியற்ற கட்டடங்களை அமைக்க வேண்டாமெனத் தெரிவித்து அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி சூழல் தொகுதி அழிந்துபோகும் வகையில் தனியார் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும்;

(v) கண்டி நகரசபையின் எல்லையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டடங்கள், மகாவலி கங்கை மாசடைவதற்கு ஏதுவாக உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கன்னோருவ தொடக்கம் புதிய தொடம்வல பாலம் வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி சூழல் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடங்களை அகற்ற இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

341/2022

கௌரவ ஹேஷா விதானகே,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையில் இன்றளவில் 20 மற்றும் 10 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் காவலர்களின் (கொஸ்தாபல்) எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) தற்போது 10 அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் சாஜன்ட்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களில் பதவியுயர்வுகளைப் பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு இதுவரை பதவியுயர்வுகள் வழங்கப் படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) பதவியுயர்வுகளைப் பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பொலிஸின் சகல உத்தியோகத்தர்களுக்கும் பதவியுயர்வுகளை வழங்குவதற்கான திட்டமொன்று உள்ளதா;

(iv) ஆமெனில், அது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

673/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள மகாவலி வலயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மகாவலி வலயங்களின் கீழுள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

966/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாதாந்த வருமானத்திற்கமைவாக வறுமைக் கோட்டின் கீழுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலானோருக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாது;

(iii) அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1105/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களினால் குப்பைகள் அகற்றப்படுவதன் விளைவாக உருவாகியுள்ள குப்பை மேடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குப்பை மேடுகள் அமைந்துள்ள இடங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி குப்பை மேடுகளில் காடுகளை அண்டியதாக காணப்படும் குப்பை மேடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி குப்பை மேடுகள் காரணமாக சூழல் தொகுதிக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி குப்பை மேடுகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1513/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் சேவையாற்றுகின்ற விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையினர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவற்றை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(vi) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்பு இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனைத் தயாரிக்கும் திகதி மற்றும் விதம் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சிலரின் ஓய்வூதியத்தை கணக்கிடுகையில் அவர்கள் விவசாய ஊக்குவிப்பாளர் மற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக சேவையாற்றிய காலப்பகுதி கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களுக்கு மேற்படி சேவை காலப்பகுதி எவ்வாறு எத்திகதியில் வழங்கப்படுமென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2639/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கஹதுடுவையிலிருந்து இரத்தினபுரி ஊடாக பெல்மடுல்ல வரையான அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் பணிகளில் காணப்படும் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) அதற்குரிய அளவீட்டுப் பணிகள் இன்றளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் காரணமாக காணிகளை இழக்கும் ஆட்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் நிறைவு செய்யப்படும் திகதி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2644/2022

கௌரவ காமினி வலேபொட,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தொழிற்சங்க இயக்கமானது இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமையாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக சர்வதேச ரீதியில் ஒழுங்குபடுத்தல் முறையியலொன்று பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அறிவாரா என்பதையும்;

(v) அவ்வாறான ஒழுங்குபடுத்தல் முறையியலொன்றை இலங்கைக்கு அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 1/2022

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 2/2022

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/2022

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2022

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2022

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2022

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2022

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/2022

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2022

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2022

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களுக்கு சமாதான நீதவான் பதவி வழங்குதல்,— கிராம மட்டத்தில் மக்களுக்கு மிக நெருக்கமாக சேவையாற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த அலுவலர்களான கிராம அலுவலர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களின் சேவையை கௌரவ சேவையாக தொடர்ந்தும் பெற்றுக்கொள்வதற்கு தற்போது ஓய்வுபெற்றுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஓய்வுபெறவுள்ள கிராம அலுவலர்களின் தகைமைகளின் அடிப்படையில் சமாதான நீதவான் பதவியை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளை இலங்கையிலிருந்து இல்லாதொழித்தல்,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளையும் உளரீதியான துன்புறுத்தல்களையும் கண்டித்து 2021.02.12 ஆம் திகதி உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் SC/FR/97/2017 மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் 341(i) ஆம் பிரிவை இரத்துச் செய்வதற்கும் UNCRC இன் இலக்கம் 19, 28(2) மற்றும் 37 ஆம் பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சின் 12/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதனாலும், 2020.03.01 ஆம் திகதி 08 வயது சிறுமியொருவர் பிரம்பால் அடித்து வீட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் கவனம் செலுத்தப்பட்ட போதிலும் மேற்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேனும் அது தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையினாலும், சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய நீண்டகால பாதகமான விளைவுகளை வெளிப்படுத்தி 2018.02.02 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய குழுவின் (UNCRC) இலங்கை மீதான கண்காணிப்பு அறிக்கை மூலம் சிறுவர் பாதுகாப்பின் நெருக்கடியான நிலைமை, குறிப்பாக உடல்ரீதியான தண்டனைகளை முடிவுக்குக் கொண்டுவருவது வலியுறுத்தப்பட்டுள்ளதனாலும், 2020.10.06 ஆம் திகதிய பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை இலக்கம் 304/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாரியளவில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவை சம்பந்தமாக திருப்தியடைய முடியாதென கல்வி அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதனாலும், துரிதமாக சட்டங்களைத் திருத்துவதன் மூலமும் தற்போதுள்ள சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையை நிறுவுதல்,— அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவாறும் கிராமிய மக்களுக்கு நெருக்கமாகப் பணியாற்றியவாறும் அளப்பரிய சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்காக யாப்பொன்றைத் தயாரித்து "இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவை"யாக அதனை நிறுவுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— உரித்துடையவர்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குதல்,— சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெறாத குறைந்த வருமானம் பெறும் மக்கள் தொடர்பில் முறையான ஆய்வினை மேற்கொண்டு, உண்மையாகவே சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெற வேண்டியவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு இதனை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல்,— கல்வியியற் கல்லூரிகளில் முறையான ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கியவாறு பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக பசுமாடு ஒன்றினை வழங்குதல்,— கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக ஒரு பசுமாடு வீதம் வழங்கி அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— ஏற்றுமதியின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு விவசாய நாடு என்ற ரீதியில் விவசாயிகளுக்குத் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் வழங்கி இறக்குமதிக்குப் பதிலாக ஏற்றுமதி ஊடாக பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்கென நிலையான தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல்,— இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவை உட்பட கல்வித் துறையின் பதவிகளுக்கான நிலையான இடமாற்றக் கொள்கையொன்று இன்றளவில் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சிடம் உள்ள போதிலும், இலங்கை கல்வி நிருவாக சேவைக்காக இதுவரையில் தேசிய இடமாற்றக் கொள்கையொன்று உருவாக்கப்படாத காரணத்தினால் மேற்படி அலுவலர்கள் விரக்திக்கு ஆளாகியுள்ளதாலும், மேற்படி நிலைமையினைத் தவிர்ப்பதற்காக இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்காகவும் தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல் மட்டுமன்றி ஆசிரியர்/அதிபர் இடமாற்ற தேசியக் கொள்கையினைச் செயற்படுத்துவதற்காகவும் அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தல்.— அபிவிருத்தியடைந்த நாடுகளில்கூட கமக்காரர்களுக்கென பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளதாலும், இலங்கையில் கமக்காரர்களுக்கென நடைமுறையிலுள்ள கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றப்படாமையால் அதன்பால் கமக்காரர்களை ஈர்ப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாலும், கமக்காரர்களுக்கு அதிகளவான நன்மைகள் கிடைக்கும் விதமாக இந்தக் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் அரசாங்கத்தினால் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/2022

கௌரவ ரோஹண பண்டார,— கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஆரம்பித்தல்,— தற்போது நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இன்றளவில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்தரக்கூடிய கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்று அரசாங்கத்தினால் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2022

கௌரவ ரோஹண பண்டார,— உள்ளூராட்சி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை வழங்கும்போது நியாயமான கொள்கையொன்றைப் பின்பற்றுதல்,— பொது மக்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியமான செயற்பொறுப்பினை நிறைவேற்றுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் சிற்றூழியர், தொழிலாளர் முதலிய நியமனங்களை வழங்கும் போது பெரும்பாலும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதானியின் பிரிவுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தற்போது காணப்படுவதனால் இந்த நிலைமையை மாற்றியமைத்து குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்படி தொழில் வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

## 2022 செப்டம்பர் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1525/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இபலோகம பொலிஸ் நிலையத்தைப் பேணிச் செல்வதற்காக நிரந்தரமான கட்டடமொன்று இல்லாமையால் இன்றளவில் அப்பொலிஸ் நிலையத்தைப் பேணிச் செல்வதற்கென "ரணஜய புர" வீடமைப்புத்தொகுதிக்குச் சொந்தமான வீடுகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையத்திற்கான ஆளுகைப் பிரதேசமானது 33 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்வாங்குகின்றது என்பதையும்;

(iii) மேற்படி பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையத்துக்கென நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொலிஸ் நிலையத்தின் பாவனைக்காக புதியதொரு உத்தியோகபூர்வ வாகனத்தை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், குறிப்பிட்ட திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1671/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் தோட்டப்புறங்களில் வாழும் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு -

(i) இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(ii) எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1894/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த மின்சாரத் தேவையில் 30% ஆனது மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுமென "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றமையினை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் நடைமுறைப்படுத்தப்படும் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அக்கருத்திட்டங்களின் விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்கள் மிகவும் மந்த கதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதனை அறிவாரா என்பதையும்;

(ii) அக்கருத்திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1999/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "நில செவன" எனும் கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் "நில செவன" அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளும், பிரதேச செயலகப் பிரிவுகளும் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு "நில செவன" அலுவலகங்களின் நிர்மாணப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்குறித்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி "நில செவன"அலுவலகங்களும் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவும், பிரதேச செயலகப் பிரிவும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு "நில செவன" அலுவலகங்களின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2041/2022

கௌரவ வேலு குமார்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை மற்றும் கங்க இஹல கோரளை ஆகிய ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பெருந்தோட்டங்களில் உரிய நியமத்திற்கமைவாக குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் தோட்டங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கு அமைய தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களின் பெயர்கள் மேற்குறித்த ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கு அமைய தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை மேற்குறித்த ஒவ்வொரு தோட்டத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்படி பிதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவும் பாரிய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2059/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஹொரண, வகவத்தை டயர் தொழிற்சாலை நிர்மாணக் கருத்திட்டத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட நிதியங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பானது எத்தனை மெகாவாட் என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கான நுழைவுப் பாதையை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2169/2022

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் – அத்துலுநுவரவில் வசிக்கும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு இதுவரையில் சட்டரீதியான வசிப்பிடம் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஆட்களுக்கு சட்டரீதியான வசிப்பிடத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2517/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பட்டப்பின் படிப்பினை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்குறிப்பிட்ட விரிவுரையாளர்களில் பட்டப்பின் படிப்பை இடைநடுவே நிறுத்தியுள்ள விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அதன் காரணமாக வீண்விரயமாகியுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2532/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை கல்வி வலயத்தின் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் தொழில்நுட்ப பீடத்திற்கு கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரின் 2020.06.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி கட்டிட நிர்மாணத்திற்காக அப்பாடசாலையின் கணினி அலகு மற்றும் 5 வகுப்பறைகளைக் கொண்ட சுமார் 60 வருடங்கள் பழமைவாய்ந்த கட்டிடம் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் அனுமதி மற்றும் வலயக் கல்வி அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோசனையின் கீழ் அகற்றப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழில்நுட்ப பீடத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2535/2022

கௌரவ மதுர விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?